சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 444 /2016**

**நாள் : 07.08.2023**

**DW 1: - ராமாத்தாள்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கில் நான் 3-ம் பிரதிவாதியாக இருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியாது. எனக்கு தற்போது 80 வயது ஆகிறது. நான்தான் என் தகப்பனாருக்கு மூத்த மகள். பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. தனசேகரன் மற்றும் சுந்தரி ஆகியோர் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சொத்தில் பாகம் கோரி வழக்கு போட்டுள்ளார்கள். பழனிக்கவுண்டர் என்கிற பழனிச்சாமி கவுண்டர் என்னுடைய தாத்தா ஆவார். அவருக்கு, என்னுடைய தகப்பனார் ராமசாமி கவுண்டர் ஒரு மகன். அவருக்கு ஒரு மகளும் இருக்கிறார். மேற்படி ராமசாமி கவுண்டருக்கு, முதல் பிரதிவாதி, 3-ம் பிரதிவாதியாகிய நான், 4-ம் பிரதிவாதி மற்றும் ஒரு அங்காத்தாள் ஆகியோர் வாரிசுகள். சண்முக சுந்தரசாமி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். என் தாயார் செல்லம்மாள் இறந்துவிட்டார். முதல் வாதிக்கு, ராமசாமிக்கவுண்டர் தந்தை வழி தாத்தா என்றால் சரிதான். 2-ம் வாதிக்கு, என் தந்தை ராமசாமிக்கவுண்டர் மாமனார் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 60 ஆண்டுகள் இருக்கும்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K. Suresh Kumar,
Subordinate Judge,
Avinashi.